கட்டப்படாமல் இருக்கின்றதோ, அங்கெல்லாம் கட்டடம் கட்டித் தந்திடவும், எங்கெங்கு ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் உடனடியாக ஆசிரியர்களை நியமித்திடவும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, அந்தக் கலைக் கல்லூரிக்கு முன்னுரிமை வழங்கி, அந்தக் குறைகளைப் போக்கிட, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு தீவிரமாகச் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

இயற்கை வேளாண்மை

***6767—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவிரி டெல்டா பகுதிகளில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவிரி டெல்டா பகுதி உட்பட, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில், அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, விவசாயிகளின் துயர் துடைக்க பல்வேறு சலுகைகளை அறிவித்த, உழவர்களின்

உற்பத்திப் பொருட்களுக்கு விலையேற்றதை அறிவித்த, விலையில்லா அரிசி வழங்கிய தாயே!

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப, விவசாயிகளின் உண்மை நிலையை உணர்ந்து, ஆட்சி செய்யும் உத்தமத் தலைவியே! விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற உழவர் பெருமக்கள் நிறைந்த காவிரி டெல்டா பகுதியில் இயற்கை வேளாண்மை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கமும், உதவியும், மானியமும் வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், காவிரி டெல்டா பகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாய வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலமாகக் கதிரடிக்கும் இயந்திரங்கள், டிராக்டர்கள், புல்டோசர்கள் ஆகியவை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், தற்போது இருக்கக்கூடிய டிராக்டர்கள் மிகவும் பழுதடைந்து இருக்கின்ற காரணத்தினால், அவற்றை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று அதிகமாக நெல் விளையக்கூடிய பகுதிகளில், கதிரடிக்கும் இயந்திரங்கள் பொறியியல் துறையில் மிகவும் குறைவான அளவில் இருக்கின்றன. எனவே, தஞ்சை மாவட்ட விவசாயிகளுடைய நலன் கருதி, அதிக அளவிலே டிராக்டர்கள், கதிரடிக்கும் இயந்திரங்கள், புல்டோசர்கள் போன்றவற்றைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்தப் பகுதி மக்கள் பயன்பெற அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். இது இயற்கை வேளாண்மை பற்றிய வினாவாகும்.

2012 ஜனவரி 31]

அடுத்து, வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

பாசன வசதி

***2726—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பகுதியிலுள்ள படேதலா கால்வாய்க்கு மார்க்கண்டேயன் ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் மாரச்சந்திரம் கிராமத்தில் மார்க்கண்டேய நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மாரச்சந்திரம் அணைக்கட்டிலிருந்து ஆற்று நீர் செல்லும் பொருட்டு 17.90 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டு, தண்ணீர் ஏரிக்கு வருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பகுதியில் அமைந்துள்ளது படேதலா கால்வாய் பகுதியாகும். அது நூற்றுக்கு மேற்பட்ட காய்ந்துபோன ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்குகின்ற திட்டமாகும். கடந்த 2005 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வேப்பனஹள்ளி தொகுதியில் அமைந்துள்ள மார்க்கண்டேயன் ஆற்று நீரைத் திருப்பி, கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள பெரிய ஏரிக்குக் கொண்டு வந்து, அங்கிருந்து